பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

### மானியக் கோரிக்கை எண். 9


**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 7 |
| 3. | கல்வி | 18 |
| 4. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 19 |
| 5. | கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் | 29 |
| 6. | இலவசக் கல்வி உதவித்தொகை | 38 |
| 7. | அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ / மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடுசெய்தல் | 43 |
| 8. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்குதல் | 44 |
| 9. | இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 45 |
| 10. | விடுதிகள் | 47 |

| | | |
|---|---|---|
| 11. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 62 |
| 12. | விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல் | 64 |
| 13. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 66 |
| 14. | விடுதி கட்டடங்கள் பராமரிப்பு | 67 |
| 15. | சீருடைகள் வழங்குதல் | 68 |
| 16. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 70 |
| 17. | இலவச வீட்டு மனை வழங்குதல் | 74 |
| 18. | சீர்மரபினர் நல வாரியம் | 75 |
| 19. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியம் | 79 |
| 20. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 82 |
| 21. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 83 |
| 22. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 87 |
| 23. | இணைப்பு | 99 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு - 2024-2025

### 1. முன்னுரை

“பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்” - குறள் 528

சமூக நீதியை நிலைநாட்டுவதிலும் சமத்துவத்தை பேணுவதிலும் தமிழ்நாட்டின் வெற்றி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இவ்வரசு, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார

வளர்ச்சியினை ஊக்குவிக்கும் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதுடன் இம்முடிவுகளில் இச்சமுதாயத்தினரின் பங்கேற்பின் முக்கியத்துவத்தை எப்போதும் வலியுறுத்தி வருகிறது.

இவ்வரசு, இதனை கருத்தில் கொண்டு இவர்களுக்கான நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கென 1969 இல் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகமும், 1989 இல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரகமும் ஏற்படுத்தப்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

1921 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கை மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திய தருணங்களில் ஒன்றாகும். இவ்விட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பிரதிநிதித்துவத்தை கல்வி மற்றும்

அரசுப் பணிகளில் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். இச்சமுதாய மக்கள், கல்வி, அரசு நிர்வாகம் மற்றும் பொது வாழ்வில் உரிய பிரதிநிதித்துவம் பெற இக்கொள்கை தொடர்ந்து உதவி வருகிறது. சுதந்திரத்திற்கு முன்பே உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டின் இடஒதுக்கீடு கொள்கையானது சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் இம்மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதியை சரிசெய்வதிலும் முக்கிய பங்காற்றி வருகிறது.

சமூகத்தில் கல்வி ஒரு முக்கிய அங்கமாகும். கல்வி மக்களை தற்சார்பு உடையவர்களாக ஆக்குவதுடன் அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்க செய்கிறது. மேலும் அவர்களை நல்ல குடிமக்களாக மாற்றுவதுடன் அவர்களுக்கு பல்வேறு வழிகளில் பயனளிக்கிறது. இவ்வரசு ஒவ்வொரு குழந்தையும் கல்வியைப் பெறுவதை உறுதிசெய்து, அனைவருக்கும் சமமான வாய்ப்பைக் ஏற்படுத்தி சிறந்த சமுதாயத்தை

உருவாக்க விழைகிறது. இவ்வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக தங்கும் விடுதிகள் நடத்துதல், கல்வி உதவித்தொகைகள், மிதிவண்டிகள் சீருடைகள் மற்றும் கிராமப்புற மாணவியருக்கு ஊக்கத்தொகை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பிரமலைக் கள்ளர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரின் வாழ்வினை மேம்படுத்துவதில் பொருளாதார வளர்ச்சி முக்கியப் பங்கு வகிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் இம்மக்கள் தொழில் முனைவோர் ஆவதற்கும் மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்குவதற்கும் கடன் உதவி வழங்குகிறது.

இந்த சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்காக, பித்தளை தேய்ப்பு பெட்டிகள் மற்றும் மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை இவ்வரசு இலவசமாக வழங்குகிறது. மாறிவரும் காலச் சூழலுக்கு ஏற்ப, ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் மற்றும் நவீன சலவையக அலகுகள் அமைப்பது ஆகிய புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஒரு முன்னோடி முயற்சியாக, சீர்மரபினர் நலவாரியம் 2007 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ்வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினருக்கு வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை நோக்கமாகக்

கொண்டு இத்துறையால் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2015 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டது. இவற்றின் 17 இலக்குகளில், இலக்கு-1 (வறுமை ஒழித்தல்), இலக்கு-4 (தரமான கல்வி) மற்றும் இலக்கு-10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியவை இந்தத் துறையுடன் நேரடியாக தொடர்புடையதாகும். இத்துறையானது இந்த நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு கவனமுடன் முயற்சிகளை மேற்கொள்கிறது.

## 2. இடஒதுக்கீடு

இந்தியாவின் வழிகாட்டி மாநிலமான தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 88 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளனர். இடஒதுக்கீட்டின் அளவு பல்வேறு காலங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீடு மாநிலத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் இடஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | பிரிவு | இடஒதுக்கீடு விழுக்காடு |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |

| | | |
|---|---|---|
| 3. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | 20 |
| 4. | ஆதிதிராவிடர் | 18 |
| 5. | பழங்குடியினர் | 1 |
| | மொத்தம் | 69 |

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப்பணிகளில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பேணிக்காத்திடவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை" என்று அழைக்கப்பட்ட பல்வேறு பிரிவினர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் ஆணை செல்லாது என உச்சநீதிமன்றத்தால் 1951 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வழி நடத்திய பெருந்திரளான எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக

அரசமைப்பு சட்டத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட்டு முதல் அரசமைப்பு சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது. பல நூற்றாண்டுகளாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் கல்வி, சமூக, மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கான சமூக நீதிப் போராட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை எனப் போற்றப்படுகிறது.

1992 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் இந்திராசஹானி (மண்டல் குழு) வழக்கில் இடஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சட்டம் 45/1994 நிறைவேற்றப்பட்டது. பின்னர் அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 31-பி - யின் பாதுகாப்பு பெறும் பொருட்டு, இச்சட்டம் இந்திய அரசமைப்பு

சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் நீங்கலாக, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

சிறுபான்மையின சமுதாயத்தினரின் தனி இடஒதுக்கீடு கோரிக்கைகள் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 33/2007) 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. இச்சட்டம் 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி

நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை ஒன்றிய அரசு 2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்ததில் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை 2021-2022 ஆம் கல்வியாண்டில் இருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்தது. இதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு வழங்கும் போது "வளமான பிரிவினரை" (Creamy layer) நீக்கம் செய்யும் கொள்கையை இவ்வரசு எப்போதும் எதிர்த்து வருகிறது. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் வலியுறுத்தி வந்தவாறு, பொருளாதார நிலையை அளவுகோலாகக் (Creamy layer) கருதாமல், சமூக நிலையை மட்டும் கருதி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒன்றிய அரசின் பணிகளிலும், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பெற வழிவகுக்கும் வகையில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

ஒன்றிய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு

இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS மற்றும் இதர உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

மேலும், இதர பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சியை எவ்விதத்திலும் நீர்த்துபோகாமல் அவர்களின் வளர்ச்சியை உறுதிசெய்ய 45 மத்திய பல்கலைக்கழகங்கள், மத்திய கல்வி நிறுவனங்கள் மற்றும் அறிவியல் தொழில்நுட்ப, தொழில்முறை உள்ளிட்ட கல்வி நிறுவனங்களான IIT, IIM மற்றும் AIIMS போன்றவற்றில் வேலைவாய்ப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் 27% ஒதுக்கீட்டினை அமல்படுத்துவதை

உறுதிசெய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் ஒன்றிய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவுகள் எப்போதுமே பின்தங்கியவர்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான கொள்கைகளை உருவாக்குவதிலும் இலக்கை அடைவதிலும் அடிப்படையாக உள்ளது. வரலாற்று ரீதியாக நமது சமூகத்தில் சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக சாதி இருந்து வருவதால், அது பற்றிய உண்மைத் தரவுகள் பொதுவெளியில் கிடைப்பது அவசியமாகிறது. இவை மட்டுமே நமது கடந்த காலத் திட்டங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்வதற்கும், எதிர்காலத்திற்கான உத்திகளைத் திட்டமிடுவதற்கு பங்களிப்பவர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் அதிகாரம் அளிக்கிறது. இருப்பினும், இந்தியாவில் கடைசியாக 1931 ஆம் ஆண்டு மட்டுமே சாதிவாரி

மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது என்பதால் சமகாலத் தரவுகள் எதுவும் இல்லை.

கடந்த 90 ஆண்டுகளில், நம் நாட்டின் மக்கள்தொகை மற்றும் சமூக-பொருளாதார நிலப்பரப்பு பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. கடந்த காலத்தில் பல விதமான நடவடிக்கைகள் எடுத்திருப்பினும் சமூகத்தின் பின்தங்கிய பிரிவினர் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். எனவே, சமூக நீதி, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் தொடர்பான அனைத்து முக்கிய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண தேசிய அளவில் பொதுவான நிலையான செயல்முறைகள் வாயிலாக பெறப்பட்ட சமகாலத் தரவுகள் திரட்டப்பட இன்றியமையாததாக உள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிக் கணக்கெடுப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் மட்டுமே நமது சமூகத்தின் சாதி அமைப்பு மற்றும் சமூக-பொருளாதார குறியீடுகளில் அதன்

பிரதிபலிப்பு பற்றிய விரிவான மற்றும் நம்பகமான தரவுகளை வழங்க முடியும். இது சான்று அடிப்படையிலான கொள்கை வகுப்பை செயல்படுத்தி, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிசெய்ய நம் அனைவருக்கும் உதவுகிறது. தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் ஒரே நேரத்தில் இந்த பணியை மேற்கொள்வது, நாடு முழுவதும் உள்ள தரவுகளின் ஒப்பீட்டை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்தும்.

எனவே, வரவிருக்கும் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைக்க ஒன்றிய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. மேலும் இந்த முயற்சி வளர்ச்சியின் நன்மைகளை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு எடுத்துச் செல்லவும், வலுவான, மேலும் உள்ளடக்கிய

இந்தியாவை உருவாக்கவும் ஒரு மகத்தான நடவடிக்கையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அத்துடன், மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டின் அளவு வேறுபடுகிறது. எனவே மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு விழுக்காட்டை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதற்கேற்ப இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்யுமாறு ஒன்றிய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

மேலும், மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகிய பிரிவினருக்கு தனியார்

வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்குமாறு ஒன்றிய அரசை இந்த அரசு வலியுறுத்தியுள்ளது.

**3. கல்வி**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து." - குறள் 398

சமூகத்தின் வளர்ச்சியை அளவிடும் அளவுகோலாக கல்வி விளங்குகிறது. எனவே இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மக்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி இம்மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக செலவிடப்படுகிறது. இவ்வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் நலனுக்காக விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன மற்றும் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கல்வி உதவித் தொகைகள்


வழங்குதல், சீருடைகள் வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் இவ்வகுப்பை சார்ந்த மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன

**4. கள்ளர் சீரமைப்பு பள்ளிகள்**

பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் கல்வி மிகவும் இன்றியமையாததாகும். மிகவும் பின்தங்கிய பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அவர்கள் அதிகம் வாழும் மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் 299 பள்ளிகளை அரசு நடத்தி வருகிறது. 2023-2024ஆம் கல்வியாண்டில் இப்பள்ளிகளில் 26,154 மாணவ, மாணவியர் பயின்றனர்.


| அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ , மாணவியர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ. எண்.** | **பள்ளிகளின் விவரம்** | **பள்ளிகளின் எண்ணிக்கை** | **மாணாக்கர்களின் எண்ணிக்கை** | | |
| | | | **மாணவர்** | **மாணவியர்** | **மொத்தம்** |
| 1. | தொடக்கப் பள்ளிகள் (15 தொடக்கப் பள்ளிகளில் LKG வகுப்பு உட்பட) | 213 | 4,603 | 4,558 | 9,161 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 22 | 720 | 774 | 1,494 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 20 | 1,182 | 1,002 | 2,184 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | 40 | 6,945 | 6,072 | 13,017 |
| 5. | உண்டு உறைவிடப் பள்ளிகள் | 4 | 154 | 144 | 298 |
| | **மொத்தம்** | **299** | **13,604** | **12,550** | **26,154** |

# கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை



**கடந்த 5 ஆண்டுகளில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை விவரம்**

| கல்வி ஆண்டு | மாணவ , மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|
| 2019-2020 | 24,544 |
| 2020-2021 | 24,912 |
| 2021-2022 | 27,607 |
| 2022-2023 | 27,279 |
| 2023-2024 | 26,154 |



கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (smart class rooms) அமைத்துத் தரப்பட்டுள்ளன. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியருக்கு அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம் மற்றும் காலணி ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

**4.1 கள்ளர் சீரமைப்பு உண்டு உறைவிடப்பள்ளிகள்**

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு தரமான கல்வியை வழங்கும் பொருட்டு, 2022-2023 ஆம் ஆண்டு மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 3 உண்டு

உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டு. 2023-2024 ஆம் ஆண்டில், இப்பள்ளிகளில் 6 மற்றும் 7 ஆம் வகுப்பில் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

2023-2024 ஆம் கல்வியாண்டில் திண்டுக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன் பட்டியில் ஓர் உண்டு உறைவிடப் பள்ளி தொடங்கப்பட்டு, இப்பள்ளியில் 6ஆம் வகுப்பில் மாணவ,மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

இப்பள்ளிகளில் 2023-24 ஆம் ஆண்டு வரை மொத்தம் 298 மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள், நூலகங்கள், விளையாட்டுக் கருவிகள் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மாணவர்களின் முழுமையான முன்னேற்றத்தினை கருத்திற் கொண்டு, அபாக்கஸ், யோகா, இசைக்கருவிகள், தொழிற்பயிற்சி ஆகியவற்றிற்கான பயிற்சி

வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு சீருடை, ஆடைகள், தட்டு, டம்ளர், வாளி, டிரங்க் பெட்டி, குவளை, ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி, புத்தகப்பை, டை, பெல்ட், காலணிகள், பூட்ஸ், காலுறைகள், டவல், போர்வை மற்றும் விரிப்புகள் ஆகியவை வழங்கப்படுகிறது. மேலும் இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**4.2 கல்விச் சுற்றுலா**

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியரை கல்வி சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம் 2022 – 2023 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2023-2024-ஆம் கல்வியாண்டில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயின்ற 1672 மாணவ, மாணவியர் ரூ.42.14 இலட்சம் செலவில் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மற்றும் சுற்றியுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலாச்சார பாரம்பரியம் மிக்க இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் மாணவ, மாணவியர் அழைத்து செல்லப்பட்டனர்.

## 4.3 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வி

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் (LKG) முதல் 10-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி (English Medium) கல்வி நடைபெற்று வருகின்றது. இந்த ஆங்கில வழி வகுப்புகளில் 2023–2024 ஆம் கல்வியாண்டில் 1,422 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

| வ. எண் | வகுப்புகள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப் பள்ளி மழலையர் (LKG) | 90 | 111 | 201 |
| 2. | தொடக்கப் பள்ளி மழலையர் (UKG) | 132 | 122 | 254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 1 முதல் 5 வகுப்பு ஆங்கில வழி | 154 | 173 | 327 |
| 4. | 6 முதல் 10 வகுப்பு ஆங்கில வழி | 338 | 302 | 640 |
| | **மொத்தம்** | **714** | **708** | **1,422** |

## 4.4 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

2023-2024 ஆம் ஆண்டில் 29 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ரூ.99.54 இலட்சம் செலவில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ரூ.4.98 கோடி செலவில் 144 கள்ளர் சீரமைப்பு பள்ளி கட்டடங்களின் சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் டைல்ஸ் பதித்தல் போன்ற பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.5 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்கில், கள்ளர் சீரமைப்பு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இதேபோன்று கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித்

தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 கல்வியாண்டில் 398 ஆசிரியர்களுக்கு ரூ.19.90 இலட்சம் செலவில் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் 4 உண்டு உறைவிடப் பள்ளிகளுக்காக செலவிடப்பட்ட ரூ.167.90 இலட்சம் உட்பட கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் நிருவாகத்திற்காக ரூ.162.59 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.164.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

கல்வியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்த அரசு, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை இடையூறின்றி தொடர ஏதுவாக பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு, இலவசக் கல்வி, பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 2021 – 2022 ஆம் ஆண்டில் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 5.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

### 5.1.1 தேர்வுக்கட்டணம் ஈடுசெய்தல் திட்டம் :

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் இப்பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஈடு செய்யப்படுகிறது.

| கட்டணம் | தமிழ் வழி (அரசு, அரசு உதவி பெறும்) | ஆங்கில வழி (அரசு, அரசு உதவி பெறும்) |
|---|---|---|
| கற்பிப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| சிறப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| 10 ஆம் வகுப்பு தேர்வு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது. |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 1,36,966 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.157.52 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 76,901 | 88.44 |
| மிபிவ/சீம | 60,065 | 69.08 |
| மொத்தம் | 1,36,966 | 157.52 |

**5.1.2. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை (PM-YASASVI)**

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கான ஒன்றிய அரசு பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், 2021-2022-ஆம் ஆண்டு வரை 50 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினாலும் 50 சதவீத நிதியுதவி மாநில அரசினாலும் வழங்கப்பட்டு வந்தது. 2022-2023

முதல் இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு: மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

தற்போது ஒன்றிய அரசின் திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி, 2022-2023 ஆம் ஆண்டு முதல் பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள அரசுப் பள்ளிகளில் 9 மற்றும் 10-ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பைச் சார்ந்த மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.4,000 வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 9 மற்றும் 10-ஆம் வகுப்பு பயின்ற 3,04,827 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.121.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவியர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| பிவ | 1,38,790 | 55.52 |
| மிபிவ/சீம | 1,66,037 | 66.42 |
| மொத்தம் | 3,04,827 | 121.94 |

2023-2024 ஆண்டிற்கு தோராயமாக 3,05,000 மாணவிகள் ரூ.122.00 கோடியில் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

2024–2025 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.55.52 கோடியும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.66.42 கோடியும் என மொத்தம் ரூ.121.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

#### 5.2.1 பள்ளி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை தேர்வுக் கட்டணம் ஈடுசெய்தல் திட்டம் :

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11 மற்றும் 12-ஆம்

வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் இப்பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஈடு செய்யப்படுகிறது.

| **கட்டணம்** | **தமிழ் வழி** (அரசு, அரசு உதவி பெறும்) | **ஆங்கில வழி** (அரசு, அரசு உதவி பெறும்) |
|---|---|---|
| கற்பிப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| சிறப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது. |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 1,91,208 மாணவ, மாணவியர்

பயனடையும் வகையில் ரூ.422.79 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| பிவ | 1,10,424 | 244.34 |
| மிபிவ/சீம | 80,784 | 178.45 |
| மொத்தம் | 1,91,208 | 422.79 |

### 5.2.2 பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம் :

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு

ஆண்டொன்றிற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் ஆகும். 2023-2024 ஆம் ஆண்டில் 714 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.463.40 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 540 | 372.93 |
| மிபிவ/சீம | 174 | 90.47 |
| மொத்தம் | 714 | 463.40 |

2024-2025 ஆம் ஆண்டிற்கு பள்ளி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை மற்றும் ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.650.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.500.00 இலட்சமும் என மொத்தம் ரூ.1,150.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.3. கல்லூரி மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (இணையதள வாயிலாக)**

இத்திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகையினை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50

இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உள்ள அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், உண்டி, உறையுள் கட்டணமாக கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் மாதம் ஒன்றுக்கு ரூ.400 வீதம் ஆண்டிற்கு (10 மாதங்களுக்கு) ரூ.4,000 வழங்கப்படுகிறது.

### 6. இலவசக் கல்வி உதவித்தொகை

இத்திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி

பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயில்பவர்களுக்கும், அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் தொழிற்படிப்பு பயில்பவர்களுக்கும் பின்வருமாறு

கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

| **கட்டணம்** | **பட்டப்படிப்பு** | **பட்டயப் படிப்பு** | **தொழிற்படிப்பு** |
|---|---|---|---|
| கற்பிப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | அரசு நிர்ணயித்த அளவில் | குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பவர்களுக்கு விலக்களிக்கப் பட்டுள்ளது |
| சிறப்பு கட்டணம் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் |
| திரும்ப பெற இயலாத கட்டாய கட்டண-ங்கள் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் |
| புத்தக கட்டணம் | கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள-வாறு | கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு | கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு |

| | | | |
|---|---|---|---|
| தேர்வுக் கட்டணம் | முழுவதுமாக வழங்கப்படுகிறது | முழுவதுமாக வழங்கப்படுகிறது | முழுவதுமாக வழங்கப்படுகிறது |
| நிபந்தனை-கள் | நிபந்தனைகள் இல்லை | பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் | பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் |

மேற்படி இக்கல்வி உதவித்தொகையுடன், கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.400 வீதம் ஆண்டிற்கு (10 மாதங்களுக்கு) ரூ.4,000 வழங்கப்படுகிறது.

## 6.1 இணையதளம் மூலம் கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் (TNeGA) உருவாக்கப்பட்ட www.ssp.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) முறையில் மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படுகிறது.

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (PM-YASASVI) திட்டத்தின்கீழ், கல்லூரி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை, இலவச கல்வி பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகிய இனங்களின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் மாணவ, மாணவியரிடமிருந்து இணையவழியாக பெறப்பட்டு வருகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.225.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு

இதுவரை 2,21,909 மாணவ, மாணவியருக்கு ரூ.103.48 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| பிவ | 1,29,515 | 64.01 |
| மிபிவ/சீம | 92,394 | 39.47 |
| மொத்தம் | 2,21,909 | 103.48 |

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கான ஒன்றிய அரசின் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், 2021-2022-ஆம் ஆண்டு வரை 100 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினால் வழங்கப்பட்டு வந்தது. 2022-2023 முதல் இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.135.00 கோடியும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.90.00 கோடியும் என மொத்தம் ரூ.225.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல்**

அரசு பள்ளிகளில் பயின்று, மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் சேரும் மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. 2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1185 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.41.30 கோடி ஈடு செய்யப்பட்டது. 2024-2025 ஆம் ஆண்டிற்கு

இத்திட்டத்திற்கு ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

ஒருங்கிணைந்த சமுதாய வளர்ச்சிக்கு பெண்கல்வி இன்றியமையாததாகும். இதனை நன்குணர்ந்த அரசு, கிராமப்புறங்களில் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண் குழந்தைகளிடையே கல்வி கற்பதை ஊக்கப்படுத்தவும் மற்றும் ஆரம்பக் கல்வியை இடையிலேயே கைவிடுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் 1999-2000 ஆண்டிலிருந்து, இம்மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் இன பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பில் பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.1,000 வீதமும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 2,57,466 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.16.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நடைமுறைபடுத்த ரூ.17.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு

பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித வருமான உச்சவரம்பின்றி மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து பேருந்து கட்டணசலுகை பெறும் மாணாக்கர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. பள்ளி வளாகத்திலேயே அமைந்துள்ள விடுதிகளில் தங்கி அதே பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணாக்கர்களுக்கும் மற்றும் 2023-2024 ஆண்டில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டில்

மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. மொத்தம் 7,25,419 மிதிவண்டிகள் ரூ.350.17 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:

| வகுப்பு | 2022-23 (முதற்கட்டம்) | | 2023-24 (இரண்டாம் கட்டம்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவ மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) | மாணவ மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) | மொத்த மிதிவண்டி எண்ணிக்கை | மொத்த தொகை (ரூபாய் கோடியில்) |
| பிவ | 177789 | 85.66 | 198781 | 96.31 | 376570 | 181.97 |
| மிபிவ/சீம | 166355 | 80.18 | 182494 | 88.02 | 348849 | 168.20 |
| **மொத்தம்** | **344144** | **165.84** | **381275** | **184.33** | **725419** | **350.17** |

2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.100.64 கோடியும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ92.42 கோடியும் என மொத்தம் ரூ.193.06 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. விடுதிகள்

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் நலனுக்கென மாநிலம்


முழுவதும் 1334 விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் 85,699 மாணவ, மாணவியர் தங்கிப் பயன்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2021-2022 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் உணவு மற்றும் தங்கும் வசதி இலவசமாக வழங்கப்படுகிறது. இத்துறையின் கீழ் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| துறை | விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பிவ | கல்லூரி | 86 | 65 | 151 |
| | பள்ளி | 369 | 205 | 574 |
| | மொத்தம் | 455 | 270 | 725 |
| மிபிவ | கல்லூரி | 51 | 53 | 104 |
| | பள்ளி | 236 | 113 | 349 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | 287 | 166 | 453 |
| சீம | கல்லூரி | 13 | 9 | 22 |
| | பள்ளி | 87 | 47 | 134 |
| | மொத்தம் | 100 | 56 | 156 |
| கல்லூரி | | 150 | 127 | 277 |
| பள்ளி | | 692 | 365 | 1057 |
| **மொத்தம்** | | **842** | **492** | **1334** |

## விடுதிகளின் எண்ணிக்கை



# ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை


| வ. எண் | துறை | விடுதிகள் | மாணாக்கர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 7840 | 5160 | 13000 |
| | | பள்ளி | 20940 | 11520 | 32460 |
| | | மொத்தம் | 28780 | 16680 | 45460 |
| 2 | மிபிவ | கல்லூரி | 4350 | 4815 | 9165 |
| | | பள்ளி | 12700 | 6225 | 18925 |
| | | மொத்தம் | 17050 | 11040 | 28090 |
| 3 | சீம | கல்லூரி | 1105 | 740 | 1845 |
| | | பள்ளி | 6814 | 3490 | 10304 |
| | | மொத்தம் | 7919 | 4230 | 12149 |
| கல்லூரி | | | 13295 | 10715 | 24010 |
| பள்ளி | | | 40454 | 21235 | 61689 |
| **மொத்தம்** | | | 53749 | 31950 | 85699 |

## 2023-2024 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட

## மாணவ, மாணவியர் எண்ணிக்கை

| வ. எண் | துறை | விடுதிகள் | மாணாக்கர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 7638 | 5251 | 12889 |
| | | பள்ளி | 18744 | 10244 | 28988 |
| | | மொத்தம் | 26382 | 15495 | 41877 |
| 2 | மிபிவ | கல்லூரி | 4380 | 4826 | 9206 |
| | | பள்ளி | 11687 | 5735 | 17422 |
| | | மொத்தம் | 16067 | 10561 | 26628 |
| 3 | சீம | கல்லூரி | 869 | 817 | 1686 |
| | | பள்ளி | 4749 | 2737 | 7486 |
| | | மொத்தம் | 5618 | 3554 | 9172 |
| கல்லூரி | | | 12887 | 10894 | 23781 |
| பள்ளி | | | 35180 | 18716 | 53896 |
| **மொத்தம்** | | | 48067 | 29610 | 77677 |

## ஒப்பளிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை




ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின்

அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின், விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு

ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்குவதற்கு கல்லூரி மாணவியர்களின் மத்தியில் தேவை அதிகரித்ததைத் தொடர்ந்து, அவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பள்ளி மாணவியர் விடுதியில் காலியாக உள்ள இடங்களில் கல்லூரி மாணவியர்களை தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2023-2024-ஆம் ஆண்டில் 473 கல்லூரி மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டில், அனைத்து கல்லூரி விடுதிகளில் பயிலும் முதல் ஆண்டு தவிர்த்து பிற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன்

மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் "கலைத்திருவிழா" என்ற தலைப்பில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்றன.

2023 – 2024 ஆம் ஆண்டில் 385 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு LED தொலைக்காட்சி பெட்டிகள் ரூ.163.24 இலட்சம் செலவில் DTH இணைப்புகள் வழங்கப்பட்டன மற்றும் மலைபிரதேசங்களில் உள்ள 20 விடுதிகளில் நீராவி கொதிகலன்கள் ரூ.6.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. மேலும் 141 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு சுகாதார குட்டை தகளிகள் ரூ.40.62 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன மற்றும் பொது தேர்வு எழுதும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.25 இலட்சம் செலவில் வினாவங்கிகள் வழங்கப்பட்டன. 368 பள்ளி

மாணவியர் விடுதிகளுக்கு ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன மற்றும் 16 மாணவியர் விடுதிகளுக்கு 2023-2024-ஆம் ஆண்டில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**10.1 புதிய விடுதிகள்**

தேவையின் அடிப்படையில் புதிய விடுதிகள் துவங்கப்பட்டு வருகின்றன. 2023-2024-ஆம் ஆண்டில் 3 கல்லூரி விடுதிகள் 200 மாணவ, மாணவியர் கூடுதலாக பயன்பெறும் வகையில் துவங்கப்பட்டுள்ளன.

**10.2 உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.1000லிருந்து ரூ.1,400 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1100லிருந்து ரூ.1,500 ஆகவும்

23.01.2024 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு உணவுக்கட்டணம் வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டு முதல் விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை, எண்ணெய் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் இருமடங்காக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

விடுதி மாணவ, மாணவிகளுக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டு, தைப்பொங்கல், குடியரசு தினம், தமிழ் புத்தாண்டு,

சுதந்திரதினம் மற்றும் தீபாவளி ஆகிய நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.213.88 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.206.75 கோடியும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.169.32 கோடியும் என மொத்தம் ரூ. 376.07 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.3 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி மற்றும் வினாவங்கி நூல்கள் வழங்கப்படுகின்றன.

2. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

4. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

6. பள்ளி விடுதியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாய்களும், கல்லூரி விடுதியில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஜமக்காளங்களும் மற்றும் பள்ளி (ம) கல்லூரி விடுதியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு 2 ஆண்டிற்கு ஒருமுறை

போர்வைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

7. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை, நீராவி கொதிகலன் வழங்கப்படுகிறது.

8. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதற்கென வழங்கப்படும் இடைநிகழ்வு செலவினத் தொகை 2022-2023ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கு ரூ.1,000-லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டது.

9. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதார குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி

விடுதிகளுக்கு மின்நூல்களை இணைய வழியில் படிப்பதற்கு ஏதுவாக கணினி (ம) இதர உபகரணங்கள், இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிகலன், உடற்பயிற்சி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் LED தொலைக்காட்சி பெட்டியுடன் DTH இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

10. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

11. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

12. மாணவ , மாணவியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

13. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

## 11. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

இத்துறையின் மூலம் நடத்தப்படும் அரசு விடுதிகள் தவிர பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியரின் நலனுக்காக அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 தனியார் விடுதிகள் இத்துறையின் கீழ் தற்போது இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு உணவு மானியம்

வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் இவ்விடுதிகளில் சேர்வதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டது. அவர்களின் உணவுச் செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 800 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ.73.22 இலட்சம் செலவிடப்பட்டது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.44.50 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.35.00 இலட்சமும் என மொத்தம் ரூ.79.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல்

விடுதிகளின் செயல்பாட்டினை ஊக்கப்படுத்தும் வண்ணம் மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 12.1 மாநில அளவிலான பரிசுகள்

ஆண்டுதோறும் மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வகை | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|
| காப்பாளர்/ காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |
| காவலர் மற்றும் ஏவலர் | 10,000 | 5,000 | 3,000 |
| சமையலர் | 10,000 | 5,000 | 3,000 |
| தூய்மைப் பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ.1.37 இலட்சம் செலவிடப்பட்டது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.1.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12.2 மாவட்ட அளவிலான பரிசுகள்

ஆண்டுதோறும் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளுள் 3 விடுதிகளையும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளுள் 3 விடுதிகளையும் தேர்வு செய்து நினைவுப் பரிசும் காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு பரிசுகளும் வழங்கும் திட்டம் 2021-2022 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. காப்பாளர் / காப்பாளினிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.7.80 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.7.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்**

வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இத்துறையின் கீழ் செயல்படும் 1,334 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் 1261 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 73 விடுதிகள் வாடகை/வேறு அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 11 விடுதிகளுக்கு சொந்த

கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 62 விடுதிகளுக்கு மாணவ, மாணவியரின் எண்ணிக்கை அடிப்படையில் சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.16.17 கோடி செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.100.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.394.50 இலட்சம் என மொத்தம் ரூ.494.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

பொதுப் பணித்துறை மூலம் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பணிகளுக்காக 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.6.93 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 94 விடுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 2023-2024ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில், 129 விடுதிகளில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15. சீருடைகள் வழங்குதல்**

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இலவச இணை சீருடைகள் ஆண்டுதோறும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையால் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும்

மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் தமிழ்நாடு துணிநூல் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 40,276 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.488.67 இலட்சம் செலவிடப்பட்டது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.250.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.241.73 இலட்சமும் என மொத்தம் ரூ.491.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 16.1 பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ், ஏழ்மை நிலையில் உள்ள சலவைத் தொழில் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000/- லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு 977 பித்தளை தேய்ப்பு பெட்டிகள் ரூ.71.13 இலட்சம் செலவில் தகுதியான நபர்களுக்கு வழங்கிட ஏதுவாக மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025 ஆம் ஆண்டில் ரூ.73.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.2 நவீன சலவையக அலகுகள் அமைத்தல்**

மாறிவரும் சூழலுக்கேற்ப நவீன சலவை அலகுகள் அமைக்கும் திட்டம் 2022 – 2023 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு நவீன சலவையகம் அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2023-2024 ஆம் ஆண்டில், 2 நவீன சலவையக அலகு அமைப்பதற்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு நவீன சலவையகம் அமைப்பதற்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.3 இலவச மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளுக்கு 2000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்து மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு ரூ.221.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.4 ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைத்தல்

ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் அமைக்கும் புதிய திட்டம் 2022-2023 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2023-2024 ஆம் ஆண்டில், ஒரு குழுவிற்கு ரூ.3 இலட்சம் வீதம் 10 ஆயத்த ஆடை உற்பத்தி

அலகு அமைப்பதற்கு ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் அமைக்கும் திட்டத்திற்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. இலவச வீட்டு மனை வழங்குதல்**

ஏழ்மை நிலையிலுள்ள வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு சொந்தமாக அவர்கள் வீடு கட்டி கொள்வதற்காக வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 518 பயனாளிகளுக்கு ரூ.223.70

இலட்சம் செலவில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.150.00 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.150.02 இலட்சமும் என மொத்தம் ரூ.300.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18. சீர்மரபினர் நல வாரியம்**

"சீர்மரபினர் நல வாரியம்", 2007 ஆம் ஆண்டில் சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டது. சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதியுடையவர் ஆவர். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா

தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை மற்றும் மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்நலவாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 38,496 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2023-2024 ஆம் ஆண்டில் 327 பயனாளிகளுக்கு ரூ.29.02 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

| வ. எண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை<br>விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. | கல்வி உதவித்தொகை | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை<br>(i) ஆண்களுக்கு<br>(ii) பெண்களுக்கு | <br>3,000<br>5,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 4,258 உறுப்பினர்களுக்கு ரூ.152.31 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாரியம் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு துணைத் தலைவர் மற்றும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் 24.11.2023 அன்று முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## 19. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

2009-ஆம் ஆண்டில் "வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்" வன்னியகுல சத்திரிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம்

கண்டு அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

உயில் எழுதிய வன்னியகுல சத்திரிய சமுதாயத்தை சேர்ந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் வன்னிய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், அரசால் "தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம், 2018" இயற்றப்பட்டு, 04.02.2019 அன்று நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் 1 தலைவர், பதவிவழி உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் மற்றும் 1 உறுப்பினர் செயலாளர் அடங்கிய தமிழ்நாடு

வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் அரசால் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் 12.04.2023 முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2023-2024 ஆம் ஆண்டில் அரசு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்தது. இவ்வாரியம் அமைக்கப்பட்டதில் இருந்து இதுவரை மொத்தம் 22 வாரியக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் ஆண்டில் புதிதாக 3 வன்னிய அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டு ஆக மொத்தம் 122 அறக்கட்டளைகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகள் 26 மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட அறக்கட்டளைகளுள் இதுவரை மொத்தம் 74 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள அறக்கட்டளைகளை பதிவு செய்ய

இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளுள், இதுவரை 35 வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துப் பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் சொத்துப் பட்டியலினை அரசிதழில் வெளியிட இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

தமிழ்நாடு சமூக நீதியை நிலைநாட்டுவதில் நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் நபர் ஒருவருக்கு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுத் தொகை 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திரு. சுப. வீரபாண்டியன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு இந்தத் திட்டத்திற்காக ரூ.5.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)-இன் கீழ் கூறு 340 உடன் படிக்கப்பட்டு ஒரு நிலையான

அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, 15.03.1993 அன்று முதல் உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணையம் 17.11.2022 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.வீ.பாரதிதாசன் அவர்கள் தலைமையில் மூன்று ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**ஆணையத்தின் பணிகள்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வு எல்லைகளாவன:-

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும்

அதன் மீது பரிந்துரைகளை வழங்குதல்.

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(3) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் சமுதாயங்களுக்கு, சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.

(4) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வகைப்பாடு மற்றும் உள்-வகைப்பாடு செய்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் மற்றும் தொடர்புடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின்

அடிப்படையில் ஆணையத்தின் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

(5) பல்வேறு சமுதாயங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நோக்கில், அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள சமுதாயங்களின் தற்போதைய நிலையை ஆராயத்தக்க புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஆணையம் தனிப்பட்ட ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

12.1.2023 அன்று நிர்ணயிக்கபட்டுள்ள கூடுதல் செயல்வரம்புகளின்படி, சி.ஏ. எண்.2600/2022 என்ற வழக்கில் 31.3.2022 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், குறிப்பாக அதன் பத்திகள் 68 மற்றும் 73-இல், குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் சமுதாயங்களுக்குள் உள்ஒதுக்கீடு வழங்கக் கோரும் முறையீடுகளை ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அளிக்க கோரப்பட்டுள்ளது. 11.07.2024-க்குள் ஆணையம் அறிக்கை அளிக்கக் கோரி காலவரம்பு நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பொருளாதார மேம்பாடு சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். இதனை கருத்திற்கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கென தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் பதிவுபெற்ற ஒரு அரசுத் துறை நிறுவனமாகும். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி ஆகும். இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி

மற்றும் வளர்ச்சி கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது.

இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப் பெறுகிறது.

### 22.1 கடன் திட்டங்கள்

இக்கழகம் தனி நபர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி / கூட்டுறவு நகர வங்கி / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது.

**22.1.1 பொது காலக் கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், குறைந்த வட்டி விகிதத்தில் சிறுவர்த்தகம்/வணிகம், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள், கைவினை பொருட்கள் மற்றும் மரபுவழிச் சார்ந்த தொழில்கள் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்ச வரம்பு |
|---|---|---|---|---|
| 1 | ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | 3 ஆண்டு முதல் 8 ஆண்டுகள் வரை | ரூ.3 இலட்சம் |
| 2 | ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 7% | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ரூ.10 இலட்சம் முதல் ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 8% | | |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 833 பயனாளிகளுக்கு ரூ.985.13 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 22.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெண்கள் சிறு வணிகம் செய்வதற்கு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| கடன் தொகை | வட்டிவிகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ரூ.2 இலட்சம் வரை | 5% | 3 முதல் 8 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 93 விழுக்காடாக உள்ளது.

2023-2024ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1080 பயனாளிகளுக்கு ரூ.585.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 22.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன்தொகை | வட்டிவிகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை; குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 4% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் 13824 பயனாளிகளுக்கு ரூ.9417.21 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 22.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை; குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 5% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 118 பயனாளிகளுக்கு ரூ.67.69 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 22.1.5 கறவை மாடு வாங்குவதற்கான கடன் திட்டம்

பொது காலக் கடன் திட்ட விதி முறைகளுக்குட்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000 வீதம் அதிகபட்சம் ரூ.60,000 கடன்வழங்கப்படுகிறது.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ரூ.60,000/- (2 கறவை மாடுகளுக்கு) | 6% | 3 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 98 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் 987 பயனாளிகளுக்கு ரூ.495.04 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் மொத்தம் 16842 பயனாளிகளுக்கு ரூ.11550.32 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| **வ.எண்** | **திட்டத்தின் பெயர்** | **பயனாளிகள் எண்ணிக்கை** | **கடன் தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | பொது காலக் கடன் திட்டம் | 833 | 985.13 |
| 2. | பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் திட்டம் | 1080 | 585.25 |
| 3. | பெண்களுக்கான நுண் கடன் திட்டம் | 13824 | 9417.21 |
| 4. | ஆண்களுக்கான நுண் கடன் திட்டம் | 118 | 67.69 |
| 5. | கறவை மாடு வாங்குவதற்கான கடன் திட்டம் | 987 | 495.04 |
| | **மொத்தம்** | 16842 | 11550.32 |

2024-2025 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.11550 இலட்சம் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகை ரூ.11000 இலட்சம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்குத் தொகை ரூ.550 இலட்சம்) அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**22.2. சிறு, குறு விவசாயிகளுக்கான நீர் பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம்**

இத்திட்டம் 2007 – 2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த தேர்வு செய்யப்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை

கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 6724 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.3210.29 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியம் வழங்குவதற்கு ரூ.450 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பினரை சமூக பொருளாதார படிநிலைகளில் முன்னோக்கி கொண்டு வருவதற்கு இவ்வரசு ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. கல்வியில் முதலீடு செய்வதன் மூலமும், முன்முயற்சியுடன் கூடிய இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதன் மூலமும், வேலைவாய்ப்பில் கவனம் செலுத்துவதன் மூலமும், இவ்வரசு இம்மக்களின் முன்னேற்றத்திற்காக செயலாற்றி

வருகிறது. இந்த சமுதாய மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க இந்த அரசு தொடர்ந்து செயலாற்றும்.

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**
**பிற்படுத்தப்பட்டோர்**
**நலத்துறை அமைச்சர்**

# இணைப்பு

# 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 819.40 | - | - | 819.40 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 3030.91 | - | - | 3030.91 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 63133.15 | 101.01 | - | 63234.16 |
| மிகப்பிற்படுத்தப்-பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 62609.86 | 695.54 | - | 63305.40 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 167.13 | - | - | 167.13 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 83.64 | - | - | 83.64 |
| சிறுபான்மையினர் நலன் | 3704.15 | 8417.94 | - | 12122.09 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 123.44 | - | - | 123.44 |
| **மொத்தம்** | **133671.68** | **9214.49** | **-** | **142886.17** |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் திரு.வா.சம்பத்,இ.ஆ.ப.,IOCL, சென்னை செயல் இயக்குநர் (மார்க்கெட்டிங் பிரிவு), திரு. அண்ணாதுரை, முதன்மை பொது மேலாளர் திரு. என். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இன்று (06.02.2024) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு உயர்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை சார்பில் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள புதிய மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் பல்வேறு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு. தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் திரு.வா.சம்பத், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், திருத்தியமைக்கப்பட்ட சீர்மரபினர் நல வாரியத்தின் தலைவரும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், துணைத் தலைவர் திரு. இராசா. அருண்மொழி மற்றும் அரசு சாரா உறுப்பினர்கள் திரு.கே.எஸ். ராஜ்கவுண்டர், திரு.சேகர், திரு. பசுவை சக்திவேல், திரு. முனுசாமி, திரு. எஸ். கணேசன், திரு.கே.எஸ். கண்ணன், திரு. கதிர்வேல், திரு. பண்ணப்பட்டி கோவிந்தராஜ், திரு.ப. சந்திரன், திரு. சூர்யா பி.தங்கராஜா, திரு. பெரி. துரைராசு, திருமதி. பாண்டீஸ்வரி மற்றும் திரு. பெரியசாமி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரிஷ் தக்கர், இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலர் திரு.வா. சம்பத், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.




இன்று (10.07.2023) சென்னை, திருவல்லிக்கேணி, பெசன்ட் சாலை, என்.கே.தி. தேசிய பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், 2022 – 2023 கல்வியாண்டில் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற 4,89,600 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 235.92 கோடி மதிப்பில் மிதிவண்டிகள்வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் அடையாளமாக10 மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி லட்சுமி பிரியா,இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத் துறை நிர்வாக இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.